www.agaram.lk

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## ஐந்தாம் தவணைப் பரீட்சை - 2022
## Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 5th Term Examination - 2022

FWC

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தமிழ் I<br>Tamil I | Three hours<br>Gr -13 (2022) | 72 | T | I |

மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடம்

❖ **பகுதி I இல் உள்ள இரு வினாக்களுக்கும், பகுதி II இல் உள்ளவற்றுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கும், எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

### பகுதி – I

*1)* மேல்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

அ)
நகுதக் கனரே நாடு மீக்கூறுநர்
இளைய னிவனென வுளையக் கூறிப்
படுமணி யிரட்டும் பாவடிப் பணைத்தாள்
நெடுநல் யானையுந் தேரு மாவும்
படையமை மறவரு முடையம் யாமென்
றுறுதுப் பஞ்சா துடல்சினஞ் செருக்கிச்
சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமஞ் சிதையத்தாக்கி முரசமொ
டொருங்ககப் படேஎ னாயிற் பொருந்திய
என்னிழல் வாழ்நர் சென்னிழற் காணாது
கொடியனெம் மிறையெனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றுங் கோலே னாகுக
ஓங்கிய சிறப்பி னுயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் றலைவ னாக
உலகமொடு நிலை இய பலர் புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகவென் னிலவரை
புரப்போர் புன்கண் கூர.
இரப்போர்க் கீயா வின்மையா னுறவே

1) நல்ல அரசன் ஒருவனது பொறுப்புணர்வு எத்தகையது என்று கூறப்படுகிறது?
2) பாண்டியன் நெடுஞ்செழியன் வஞ்சினம் உரைத்தமைக்கான காரணங்கள் எவை?
3) இச்செய்யுளினூடாக அக்கால அரசர்கள் தொடர்பாக வெளிப்படும் தகவல்கள் எவை?

(12 புள்ளிகள்)



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk

ஆ) கார் எனக் கடிது சென்றான் கல்லிடைப் படுத்த புல்லின்
வார் சிலைத் தடக்கை வள்ளல் வைகிய பள்ளி கண்டான்
பார்மிசைப் பதைத்து வீழ்ந்தான் பருவரற் பரவை புக்கான்
வார் மணிப் புனலால் மண்ணை மண்ணுநீர் ஆட்டும் கண்ணான்.

1) இச் செய்யுள் இடம்பெறும் சந்தர்ப்பத்தினை விளக்குக.
2) இச் செய்யுளில் இடம் பெறும் உவமைகளை எடுத்துக்காட்டி விளக்குக.
3) பரதன் இராமன் மீது கொண்ட பாசம் எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகிறது?

*(12+12 = 24 புள்ளிகள்)*

2) (அ) பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

**அல்லது**

(ஆ) பகுதியிலுள்ள உரைப்பகுதியைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

அ) உலகமிசை உணர்வெழுப்பிக் கீழ்த்திசையின் மீதில்
உதித்து விட்டான் செங்கதிரோன்; தகத்தகாயம் பார்!
விலகிற்றுக் காரிருள் தான்; பறந்தது பார் அயர்வு;
விண்ணிலெலாம் பொன்னொளியை ஏற்றுகின்றான் அடடா
மிலையும் எழிற் பெருங்கடலின் அமுதப்ர வாகம்!
மேலெல்லாம் விழி அள்ளும் ஒளியின் ப்ரவாகம்!
நலம் செய்தான்; ஒளி முகத்தைக் காட்டி விட்டான்.
காட்டி நடத்துகின்றான் தூக்கமதில் ஆழ்ந்திருந்த உலகை!
ஒளி செய்தான் கதிரகோமான் வானத்தில் மண்ணில்!
உயர்மலைகள், சோலை நதி இயற்கை எழில்கள் பார்!
களி செய்தான் பெருமக்கள் உள்ளத்தில்! அதனால்
கவிதைகள், கைத்தொழில் என்னென்ன ஆக்கம்!
தெளிவளிக்க இருட்கதவை உடைத்தெறிந்தான்
திசைமகளை அறிவுலகில் தழுவுகின்றார் மக்கள்;
ஒளியுலகின் ஆதிக்கம் காட்டுகின்றான். வானில்
உயர்கின்றான், உதயசூரி யன்வாழ்க நன்றே!

அ) உதய சூரியனின் வருகையால் இவ்வுலகில் ஏற்பட்ட மாற்றங்களைக் கவிஞர் எவ்வாறு விபரிக்கின்றார்?
ஆ) இம்மாற்றங்களால் கவிஞரின் உள்ளத்தில் ஏற்பட்ட உணர்வுகள் எவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றன?
இ) கவிஞர் சூரியன் மீது கொண்ட ஈடுபாடு எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகின்றது?
ஈ) கவிஞரால் கையாளப்பட்டுள்ள உத்திகளை விளக்குக. *(16 புள்ளிகள்)*

**அல்லது**

ஆ) கதிரேசன் செட்டியார் எப்பொழுது பார்த்தாலும் கடைச்சிப்பந்திகள் மீது இப்படிச் சீறி விழுவதைப் பல வருஷங்களாகப் பார்த்துக் கொண்டு வந்தவர் ஷண்முகம் பிள்ளை. ஒரு நாள் கூட செட்டியார் அன்பாக ஒரு பையனைப் பார்த்துப் பேசியதில்லை மாதத்தில் பத்து நாட்களாவது அவர் செட்டியார் கடைக்கு வந்து சிறிது நேரம் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்து விட்டுப்போவார்.



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

அவர் வந்து விட்டால் கடைப் பையன்களுக்கு ஒரே கொண்டாட்டம் ஏனென்றால் அவரோடு பேசிக்கொண்டிருக்கும் போது செட்டியார் சஹஸ்ரநாம அர்ச்சனையைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்து விடுவார் என்பது அவர்களுக்குத் தெரியும். செட்டியாரும் கூட அர்ச்சனையை நிறுத்துவதற்கு அதை ஒரு நல்ல சந்தர்ப்பமாகக் கருதுவார்! சோமசுந்தரம் பிள்ளை குறுக்கிட்டுக் கடைப் பையன்களுக்குப் புத்தி சொல்லத் தொடங்கி விட்டாலும், கொஞ்சம் மூச்சு விட்டு ஓய்வெடுத்துக்கொள்வார். பையன்களைத் தாம் திட்டும் போது தடுத்து நிறுத்துவதற்கு ஒரு ஆள் வேண்டும் என்பதற்காகவே சோமசுந்தரம்பிள்ளையை அந்த முப்பது வருஷகாலமும் தம் கடையில் கணக்குப்பிள்ளையாக வைத்துக் கொண்டிருக்கிறார் என்று சொன்னாலும் தவறில்லை.

செட்டியாரின் குணாதிசயங்களெல்லாம் கடைப்பையன்களுக்கு மனப்பாடம். இரண்டு வாரங்களுக்கு முன் வந்து சேர்ந்த புதுப் பையன் வெங்கடாசலத்துக்கு இன்னும் முதற் பாடம் கூடச் சரிவரப் புரியவில்லை. அதனால் தான் அவனுக்குச் செட்டியார் திட்டும் போது உள்ளூற மனம் குமுறியது. "பிச்சைக்காரன்", "கஞ்சிக்கு இல்லாதவன்", "நாயே,பேயே" என்று எத்தனையோ இழி சொற்களைச் சேற்றிலே தோய்த்து எடுத்துச் செட்டியார் வீசியிருக்கிறார். அவன் சொல்லாமல் கொள்ளாமல் கடையைவிட்டு ஓடிவிடலாம் என்று நினைத்தாலும், தன் தகப்பனாரின் கண்டிப்புக்குப் பயந்து இன்னும் அங்கேயே இருந்து கொண்டிருந்தான்.

அவனுடைய ரோஷத்தை கண்டும், செட்டியார் தங்களைத் திட்டுவதைக் கண்டும் மற்றப் பையன்கள் சிரித்ததற்குக் காரணம் அவர்களுக்கு மானமோ ரோஷமோ இல்லாதது தான் என்று யாராவது நினைத்தால், அதைவிடப் பெரிய தவறு வேறொன்று இருக்க முடியாது.

அ) கதிரேசன் செட்டியாரின் குணாதிசயமாகக் குறிப்பிடப்படும் பண்பு யாது?

ஆ) சகஸ்ர நாம அர்ச்சனை, சேற்றிலே தோய்த்து எடுத்து வீசுதல் என்பன எதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன?

இ) ஷண்முகம் பிள்ளையைக் கண்டதும் கடைப் பையன்கள் மகிழ்ச்சியடையக் காரணம் யாது?

ஈ) ஆசிரியரின் உரைநடை பற்றிக் கருத்து வழங்குக.

*(4+4 = 16 புள்ளிகள்)*

## பகுதி – II

3) இடன் அறிதல் என்ற அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறியுள்ளவற்றை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

அ) பகைவரின் கோட்டையைச் சூழ்வதற்குப் பொருத்தமான இடத்தை அறிதல்

ஆ) போர் செய்வதற்குப் பொருத்தமான இடத்தை அறிதல்

இ) பகைவருடன் போர் செய்யக்கூடாத இடத்தை அறிதல் *(20 புள்ளிகள்)*

4) கம்பராமாயணம் குகப்படத்தில் குகனது கட்டளையால் பல நாவாய்கள் வந்தது முதல் சேனைகள் யாவுங்கங்கையைக் கடந்தது வரையிலான பகுதியை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

அ) நாவாய்கள் பற்றிய வருணனை

ஆ) யானைகள் சென்ற விதம்

இ) தேர்கள் நாவாயிற் சென்ற விதம்

ஈ) குதிரைகள் நாவாயிற் சென்ற விதம் *(20 புள்ளிகள்)*



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk

www.agaram.lk

5) சீனித்தம்பி ஆறுமுகத்தின் 'கூத்து' என்ற சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

அ) கூத்துக்களரி பற்றிய சித்திரிப்பு

ஆ) அக்காலக் கூத்தாட்ட நடைமுறைகள்

இ) நாகாத்தையின் மீதான காதல் சரவணமுத்துவின் வாழ்வில் செலுத்திய செல்வாக்கு

ஈ) சிறுகதை ஆசிரியரின் மொழிநடை, ஆகியவற்றை விளக்குக. *(20 புள்ளிகள்)*

6) 'மானுடன் தழுவிய கவிஞர்கள்' என்ற க கைலாசபதியின் கட்டுரையினை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

அ) வள்ளுவர் இளங்கோ, கம்பர், பாரதி ஆகியோர் மகாகவிகள் எனப்படுவதற்காள காரணங்கள்

ஆ) மகாகவிகளை இனங்கண்டு கொள்வதற்காள அளவுகோல்கள்

இ) பாரதி பற்றிய ஆசிரியரின் கருத்துக்கள்

ஈ) கட்டுரையில் கையாளப்பட்டுள்ள மொழிநடை *(20 புள்ளிகள்)*

7) காரணமாலை திருமக்கமா நாட்டுச் சிறப்பை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

அ) மக்கமாநகரின் இயற்கையழகு

ஆ) முஹம்மது நபியவர்களின் பெருமை

இ) ஆன்மீகக் கருத்துக்கள்

ஈ) கவிதை வெளிப்பாட்டு முறை *(20 புள்ளிகள்)*

8)

அ) பாரதிதாசனின் மானிட சக்தியில் உளவியல் சார்ந்த கருத்துக்கள் புலப்படுமாறு

ஆ) மணிமேகலையில் விலங்குகள், பறவைகளின் அன்பு வெளிப்படுமாறு

இ) தேம்பாவணி காட்சிப்படலத்தில் இயேசுவின் பெருமைகள் கூறப்படுமாறு

ஈ) அமலனாதிபிரானில் திருவரங்கத்தின் எழில் வருணிக்கப்படுமாறு

உ) இருதுயரங்கள் நாடகத்தின் சிறப்பம்சங்கள் வெளிப்படுமாறு *(20 புள்ளிகள்)*

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

www.agaram.lk

FWC

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## ஐந்தாம் தவணைப் பரீட்சை - 2022
## Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 5th Term Examination - 2022

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தமிழ் II<br>Tamil II | Three Hours<br>Gr -13 (2022) | 72 | T | II |

மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடம்

- **பகுதி I இல் உள்ள மூன்று வினாக்களுக்கும் பகுதி II இல் உள்ளவற்றுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்கும் எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

### பகுதி – I

1) **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
ஒவ்வொரு கூற்றுக்கும் கீழே ஐந்து விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

1. பின்வருவனவற்றுள் வளைநா வெடிப்பொலி
   1) ட் 2) ப் 3) ம் 4) ய் 5) ங் (…….)

2. பின்வருவனவற்றுள் ககரம் வேறுபட்டு ஒலிக்கும் சொல்
   1) கடல் 2) மக்கள் 3) நன்கு 4) செய்கை 5) வெட்கம் (……)

3. பின்வருவனவற்றுள் மூன்று மெய்கள் மயங்கி வரும் சொல்.
   1) பயிற்சி 2) இயல்பு 3) வேய்ங்குழல் 4) வெல்லம் 5) மங்கை (……)

4. ‘புலவர் இளங்கோ’ என்பது.
   1) வினைத் தொகை 2) உவமைத் தொகை 3) வினைத் தொகை
   4) இருபெயரொட்டுப்பண்புத் தொகை 5) வேற்றுமைத் தொகை (……)

5. ‘நாங்களும் உங்களுடன் வருகிறோம்’ இவ்வாக்கியத்தில் நாங்கள் என்பது
   1) மாற்றுப்பெயர் 2) தன்மைப்பெயர்
   3) தன்மைப்பன்மைப்பெயர் 4) உளப்பாட்டு தன்மைப்பன்மைப்பெயர்
   5) உளப்படுத்தாத் தன்மைப் பன்மைப்பெயர் (……)

6. பின்வருவனவற்றுள் மூவிடத்துக்கும் பொதுவான வினாப்பெயர்
   1) யார் 2) எவர் 3) எவள் 4) யாது 5) என்ன (……)

7. கால்நடைப் பண்ணைகளில் தொற்றுநோய் பரவுகிறது இவ்வாக்கியத்தில் ‘கால்நடை’ என்பது.
   1) கூட்டுப்பெயர் 2) ஆகுபெயர் 3) வேற்றுமைத்தொகை
   4) பண்புத் தொகை 5) தொகாநிலைத் தொடர் (……)

8. அன்பால் எதிரிகளையும் வெற்றி கொள்ளலாம். இவ்வாக்கியத்தில் ஆல் உருபு உணர்த்தும் பொருள்.
   1) கருத்தா 2) காரணம் 3) கருவி
   4) நீங்கல் 5) முதற்காரணம் (……)

9. கிராமத்து மக்கள் எல்லோரும் இடம்பெயர்ந்துவிட்டனர். இவ்வாக்கியத்தில் வரும் இடைச்சொல் உணர்த்தும் பொருள்.
   1) எண் 2) ஐயம் 3) எச்சம்
   4) முற்று 5) சிறப்பு (……)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk



agaram.lk

10. பின்வருவனவற்றுள் வினையடைத் தொடராக அமைவது.
1) மிக மிக அன்பான
2) எல்லோரையும்விட மிகவும் விரைவாக
3) மிக மிக அருவருப்பான
4) மிகவும் சிறப்பான
5) மிக மிக உயரமான (......)

11. அடிச்சொல்லின் ஈற்றுமெய் இரட்டித்துக் காலம் காட்டும் சொல்.
1) உண்டான்
2) வருவான்
3) கண்டான்
4) புக்கான்
5) ஓடுவான் (......)

12. பின்வருவனவற்றுள் காரணவினா
1) செய்தேன்
2) செய்துவிட்டேன்
3) செய்வித்தேன்
4) செய்துமுடித்தேன்
5) செய்கிறேன் (......)

13. பின்வருவனவற்றுள் வினைத் தொகையாகவும் உவமைத் தொகையாகவும் வரக் கூடிய சொல்.
1) துடியிடை
2) மதிமுகம்
3) மதிக்குளிர்
4) மலர்விழி
5) சுடுசோறு (......)

14. இக் குரலை எங்கேயோ கேட்டிருக்கிறேன் என்பதில் ஓகார இடைச்சொல் உணர்த்தும் பொருள்
1) திடக்குறிப்பின்மை
2) பிரிநிலை
3) வினா
4) ஐயம்
5) மிகுதி (......)

15. ஆல் வேற்றுமை உருபாக இடம்பெறும் சொல்.
1) நடந்தால்
2) நடந்திருந்தால்
3) நடந்ததால்
4) நடக்காவிட்டால்
5) நடந்திருக்காவிட்டால் (......)

16. கூட்டு வினை இடம்பெறும் வாக்கியம்.
1) நான் ஊருக்குப் போய்வந்தேன்
2) நான் ஊரிலிருந்துவந்தேன்
3) நான் ஊருக்கு வரமாட்டேன்
4) நான் ஊரிலிருந்து வந்து விட்டேன்
5) நான் உங்களை ஊருக்கு வந்து பார்க்கிறேன் (......)

17. பின்வருவனவற்றுள் 'இ' கால இடைநிலையாக வந்துள்ள வினைமுற்று
1) ஓடினேன்
2) ஓடினாய்
3) ஓடினார்
4) ஓடின
5) ஓடியது (......)

18. பின்வருவனவற்றுள் பொது வினை
1) எழுது
2) படி
3) பார்
4) முறி
5) உண் (......)

19. படித்த என்பது பெயரடையாக வரும் வாக்கியம்
1) அவர் படித்த புத்தகங்கள் ஏராளம்
2) என்னிடம் படித்த மாணவர்கள் என்னை இன்றும் மதிக்கிறார்கள்
3) என்னுடன் படித்த ஆரபி நன்றாகப் பாடுவாள்
4) அவன் படித்த பெண்ணை தான் திருமணம் செய்தான்
5) நான் படித்த கவிதை அற்புதமானது (......)

20. பின்வருவனவற்றுள் எழுவாய் அற்ற வாக்கியம்.
1) பாடசாலைக்குச் சென்றான்
2) கொழும்புக்குப் போனேன்
3) அழகாக வீழ்ந்தது அருவி
4) எனக்கு நன்றாகப் பாடத்தெரியும்
5) அவன் எனது உறவினன் (......)

(20 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

## பகுதி II

2) அ) பின்வரும் உரைப்பகுதியை 50 சொற்களில் சுருக்கி எழுதுக.

இலக்கியப் படைப்பாளி ஒருவன் தன்னைச் சுற்றிவாழும் சக மனிதர்களையும், அவர்களது நடவடிக்கைகளையும் அவ்வப்போது நம் சமூகத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கும் சம்பவங்களையும் மாறுதல்களையும் அவற்றுக்கான அக, புறக் காரணங்களையும் உற்று நோக்கும் போது எழும் ஒருவகை மன உந்துதல் காரணமாக ஒரு கலைப் படைப்பைப் படைக்க ஆரம்பிக்கின்றான். அதன் வழியே அவன் இந்தச் சமூகத்திடம் சில விடயங்களை அல்லது செய்திகளைத் தெரிவிக்க ஆசைப்படுகின்றான். இப்படித்தான் நம் சமூகத்தில் ஒரு படைப்பாளி உருவாகின்றான்.

படைப்பாளி ஒருவன் ஒரு கலைப்படைப்பைப் படைக்க மிகப்பெரிய படைப்பாளியாகவோ பண்டிதனாகவோ இருக்க வேண்டும் என்ற கட்டாயம் ஒன்றும் கிடையாது. அது மட்டுமல்ல, கலை இலக்கியக் கோட்பாடுகள், உலக தத்துவங்கள் போன்றவைகளைப் படித்துத் தெரிந்திருக்க வேண்டும் என்ற அவசியமும் இல்லை. இவனது படைப்பு, கருத்து, கண்ணோட்டம், சமூக நிகழ்வுகளைப் பற்றிய மதிப்பீடு போன்றவை குறுகிய கண்ணோட்டத்துடன் அல்லது கோணல் மாணலான சித்திரிப்பாக இவனது இரசனைக்கும் விருப்பத்துக்கும் இசைய திசைமாறிச்செல்ல வாய்ப்புண்டு இம் மாதிரியான சந்தர்ப்பங்களில் அத்தவறான போக்கினைக் கண்டித்து அதனை விமர்சித்து, அப்படைப்பைச் செறிவுபடுத்த வேண்டியது அவசியமாகின்றது. இதை இலக்கியத் திறனாய்வின் மூலமே சாதிக்க முடியும்.

(13 புள்ளிகள்)

ஆ) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

ஓய்வு என்பது சீமான்களாக உள்ள சிலருக்கு மட்டும் உரிமையாக இருந்த காலம் உண்டு நிலைமை இப்போது மாறி வருகிறது ஓரளவிற்கு நம்பிக்கை தரும் வகையில் ஓய்வு சிலருக்கும், ஓயாத வேலைத் தொல்லை மிகப் பலருக்கும் என்ற முறையில் சமூக அமைப்பு இருக்கும் போது ஓய்வின் விளைவுகளாக கலை, பண்பு இவைகளை அல்ல, கருத்தற்ற களியாட்டம், வேதனையூட்டும் வெறியாட்டம் ஆணவ ஆர்ப்பாட்டம் இவைகளையே காண முடியும்.

ரோம் சாம்ராஜ்யத்திலே ஒரு விசித்திர அரங்கம், பள்ளத்தில் அரங்கம், பார்வையாளர்கள் உயரத்தில் அமர்ந்திருப்பர், அரங்கத்திலே வீரப்போர் நடைபெறும். மல்யுத்தமல்ல – வாட்போர் அல்ல – பலசாலிக்கும் வலிமைசாலிக்கும் அல்ல. மனிதனுக்கும் சிங்கத்துக்கும் சண்டை. பதைபதைக்கும் மனிதன், பசியுடன் உள்ள சிங்கம். பயங்கரமான போர் பள்ளத்தில். மேலே சீமான்கள், சீமாட்டிகள் இரசிக்க கர்ஜனை செய்யும் காட்டரசன் வாலைச் சுழற்றித் தரையில் அடிக்கும் பயத்தால் மனிதனின் பற்கள் ஒன்றோடொன்று உராயும். மேலே சீமாட்டிகளின் சிரிப்பொலியும் கைதட்டுவதால் எழும் வளையொலியும் கிளம்பும். சீமான்கள் சொக்குவர் இரத்தம் பீறிட்டு வரும் மனிதனுக்கு சீமான்கள் மேலே இருந்து ஆரவாரம் செய்வர். விடாதே, விலகாதே என்று ஆயுதமற்ற மனிதனுக்கு உற்சாக மூட்டுவர். பசியாற் புதிய பலம் பெற்ற சிங்கத்தைத் தாக்கும் படி. காட்டரசன் கிழித்தெறிவான் மனிதனை. கீழே அரங்கத்தில் - மேலே, மேட்டுக்குடியினரான மனித மிருகங்கள். ஓய்வு நேரத்தை ரோம் நாட்டுச் சீமான்கள் பயன்படுத்திய வகைகளிலே இதுவொன்று. மனிதனை மிருகம் கொல்வது கண்டு களிக்கும் பொழுதுபோக்கு

ஓய்வு சிலருக்கு வேலை பலருக்கு என்ற முடிவு மாறினாலொழிய ஓய்வு, சமூக உயர்வுக்குப் பயன்படும் பண்பு ஆகமுடியாது. வாழ்க்கைத் தரம் மட்டமாக இருக்கும் சமூகத்திலே ஓய்வு கிடைத்துப் பயனில்லை. பொருளும் இல்லை. வேகாத பண்டத்தை வெள்ளித்தட்டிலே வைத்துத் தரும் வீண் வேலையாகும்.

1) வாழ்க்கைத்தரம், ஓய்வு, பண்பாட்டு வளர்ச்சி ஆகியவற்றுக்கிடையிலான தொடர்பு பற்றி ஆசிரியர் யாது கூறுகிறார்?
2) சிலருக்கு ஓய்வும் பலருக்கு ஓயாத வேலைத் தொல்லையும் தரும் சமூக அமைப்பில் ஓய்வின் விளைவுகள் எவை?
3) ரோம் நாட்டுச் சீமான்கள் ஓய்வுநேரத்தைப் பயன்படுத்திய விதம் பற்றிய விபரிப்பின் மூலம் அது பற்றிய ஆசிரியரின் எதிர்ப்புணர்வு எவ்வாறு வெளிப்படுகின்றது?
4) மேட்டுக் குடியினரை மனித மிருகங்கள் என்று ஆசிரியர் ஏன் கூறுகின்றார்?
5) ஓய்வின் விளைவுகளாக எவை காணப்பட வேண்டும் என ஆசிரியர் கருதுகிறார்?
6) தன் கருத்தை வலியுறுத்த ஆசிரியர் கையாண்ட உத்திகள் எவை?

(6x2 = 12 புள்ளிகள்)

(13+12 = 25 புள்ளிகள்)



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk

3) பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிந்து 300 – 350 சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.

அ) பொருளாதார நெருக்கடிகளும் தீர்க்கும் வழிகளும்.
ஆ) அறிவியல் வளர்ச்சியின் ஆதிக்கம்.
இ) சமூக ஊடகங்களும் உண்மைத் தன்மையும்.
ஈ) தமிழர் பண்பாடும் இன்றைய வாழ்வும்.
உ) தமிழ் இலக்கியங்களில் மானுட சமத்துவம். (5 புள்ளிகள்)

## பகுதி II

4) அ) பதிணெண் மேற்கணக்கு நூல்களைப் பொருள் அடிப்படையில் வகைப்படுத்துக.
ஆ) சங்கமருவிய காலத்தில் தோன்றிய அறநூல்களின் பண்புகளை விளக்குக.
இ) இக்காலத்தில் தோன்றிய காவியங்கள் தமிழ் இலக்கிய வரலாற்றில் பெறும் இடத்தை மதிப்பிடுக. (15 புள்ளிகள்)

5) அ) பல்லவர் காலத்தில் தோற்றம் பெற்ற பக்தி சாரா இலக்கியங்களைக் குறிப்பிடுக.
ஆ) அவ் விலக்கியங்களின் பண்புகளை விளக்குக.
இ) பக்தியிலக்கிய வளர்ச்சியில் மாணிக்கவாசகர் பெறும் முக்கியத்துவத்தை விளக்குக. (15 புள்ளிகள்)

6) அ) பத்தொன்பதாம் நுற்றாண்டில் ஈழத்தில் நிகழ்ந்த மரபிலக்கிய முயற்சிகள் பற்றித் தெளிவுபடுத்துக.
ஆ) ஆங்கிலேயர் காலத்தில் ஈழத்தில் எழுந்த மரபு சார் இலக்கியங்களின் பண்புகள் யாவை?
இ) பத்தொன்பதாம் நூற்றாண்டில் உரைநடையின் பன்முகப்பட்ட வளர்ச்சி நிலைகளைத் தெளிவுபடுத்துக. (15 புள்ளிகள்)

7) பின்வருவோரில் யாரேனும் இருவர் ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் பெறும் முக்கியத்துவத்தினை மதிப்பிடுக.

அ) அரசகேசரிப் புலவர்.
ஆ) யாழ்ப்பாணம் பதுறுத்தீன் புலவர்.
இ) சி.வை.தாமோதரம் பிள்ளை.
ஈ) பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை (15 புள்ளிகள்)

8) அ) i) பின்வரும் வாக்கியத்திலுள்ள பொருள் மயக்கத்தை இனங்கண்டு விளக்குக.
ஒவ்வொரு ஆண்டும் தலைசிறந்த உதைபந்தாட்ட வீரர் மெஸ்லி ஏழை ஒருவருக்கு உதவி வருகிறார்.

ii) பின்வரும் வாக்கியத்திலுள்ள வழுவைச் சுட்டிக்காட்டி வழுவற்ற முறையில் வாக்கியத்தைத் திருத்தி எழுதுக.
வினைப் பகுபதங்களில் பகுதியாக அமையும் சொற்கள் கட்டளைப் பொருளில் வரும் வினையடிகளாகவே அமைகின்றது.

iii) பின்வரும் செய்வினை வாக்கியத்தைச் செயற்பாட்டு வினைவாக்கியத்தை மாற்றி எழுதுக.
மக்களின் நலன்களுக்காக அரசாங்கம் ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தியுள்ளது.

iv) "வாழ்" என்ற வினையடியாகப் பிறக்கும் ஆக்கப் பெயர், தொழிற்பெயர் வினையாலணையும் பெயர் என்பவற்றுக்கு ஒவ்வொரு உதாரணம் தருக.

v) பின்வரும் சொற்களை அவற்றில் இடம் பெற்றுள்ள எழுத்துப் பிழைகளைத் திருத்தி சரியான முறையிலே எழுதுக.
1. செயப்படுபொருள்
2. ஐநூறு ரூபாய் (10 புள்ளிகள்)

ஆ) பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று பற்றிச் சிறுகுறிப்பு வரைக.
i) மாற்றொலியன்கள்
ii) ஆறாம் வேற்றுமை
iii) வியங்கோள் வினை (15 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk



agaram.lk